## 8 கடைகளை அகற்ற டி.பி.கே.எல். உத்தரவு

# திண்டாட்டத்தில் வணிகர்கள்




கோலாலம்பூர், அக். 10-


தீபாவளிக்காவது கொஞ்சம் வருமானம் பார்க்கலாமே என்ற எண்ணத்தில் சிறிய மற்றும் சில்லறை வணிகர்கள் தீபாவளி சந்தையில் தற்காலிக கடைகளுக்கு விண்ணப்பம் செய்வது வழக்கம். அனுமதி கிடைப்பதில் சிக்கல் என்பது ஒரு புறமிருக்க, கடைகள் கிடைத்தாலும் வணிகம் செய்ய முடியாத நிலையில் சில வணிகர்கள் உள்ளனர். குறிப்பாக தலைநகர் பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியாவில் மொத்தமாக 22 தற்காலிக கடைகள் கொடுக்கப்பட்ட நிலையில் எட்டு கடைகளை அகற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இது நியாயமான செயல் அல்ல என்று அவர்கள் கூறுகின்றனர்.

(செய்தி விரிவாக பக்கம் 16)

---

## பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியா

## சிறுதொழில் வணிகர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதா?





# “எங்களுக்குத் தொல்லை கொடுக்காதீர்”

(எஸ்.ஜீவராஜா-ஆர்.குணா)

**கோலாலம்பூர், அக்.10-**

**பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியாவில் உள்ள சிறுதொழில் வணிகர்களின் அன்றாட செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடும் என நம்பப்படும் தீபாவளி கலை நிகழ்ச்சிக்கான மேடையை வேறோர் இடத்திற்கு மாற்றும்படி பாதிக்கப்பட்ட தற்காலிக கடைக்காரர்கள் நேற்று கோரிக்கை விடுத்தனர்.**



கோலாலம்பூர் மாநகர் மன்றம் பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியாவில் தற்காலிக கடைகளுக்கு அனுமதி வழங்கியிருப்பதாக பிரிக்பீல்ட்ஸ் சிறிய மற்றும் நடுத்தர இந்திய வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் எம்.குணசீலன் கூறினார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியாவில் இந்திய சிறுதொழில் வணிகர்கள் வியாபாரம் செய்வதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் 22 தீபாவளி கடைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

பிரிக்பீல்ட்ஸ் நீரூற்றுக்கு எதிர்புறத்தில் இந்த 22 கடைகளும் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. தீபாவளிக்குத் தேவையான புத்தாடைகள் மற்றும் இதர பொருட்களை வியாபாரிகள் இப்போது விற்பனைக்காக தயார் செய்து வருகின்றனர்.

ஆனால் அங்கிருந்து எட்டு கடைகளை அகற்ற வேண்டும் என மாநகர் மன்றம் திடீரென உத்தரவு பிறப்பித்துள்ளது. தீபாவளி கலை நிகழ்ச்சிக்காக அங்கு மேடை அமைக்கப்படவிருப்பதால் இந்த எட்டு கடைகளையும் அகற்ற வேண்டும் என்று கூறப்படுகிறது.

கடைகளுக்கான கூடாரங்கள் அனைத்தும் போடப்பட்ட பிறகு கடைகளை அகற்ற வேண்டும் என்று இப்போது உத்தரவு பிறப்பித்திருப்பது எந்த வகையில் நியாயம் என்று குணசீலன் கேள்வி எழுப்பினார்.

இதை ஒரு காரணமாகக் காட்டி 8 கடைகளை அகற்றச் சொல்வது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. பிரிக்பீல்ட்ஸில் தீபாவளி கலை நிகழ்ச்சியை நடத்துவதற்கு வேறிடம் உள்ளது. அந்த இடத்தில் மேடையை அமைத்துக் கொள்ளலாம். எங்கள் வியாபாரத்திற்கு எந்த இடையூறும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதே எங்களின் முதன்மை கோரிக்கையாகும் என்றார் அவர்.

ஆகையால் சம்பந்தப்பட்ட விவகாரத்திற்கு நல்லதொரு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.